தினமணி சென்னை 5

சனிக்கிழமை, 11 செப்டம்பர் 2021

# ராமச்சந்திராவில் பேரிடர் கால அவசர சிகிச்சை ஒத்திகை

**சென்னை, செப். 10:** போரூர் ஸ்ரீ ராமச்சந்திரா மருத்துவ மையத்தில் பேரிடர் கால அவசர ஒத்திகை நடத்தப்பட்டது.

இதுகுறித்து, மருத்துவ மையத்தின் அவரச சிகிச்சை பிரிவுத் தலைவர் ராமகிருஷ்ணன் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பு:

போரூர் ஸ்ரீ ராமச்சந்திரா மருத்துவ மையத்தில், சாலை விபத்து சார்ந்த பேரிடர் அவசர சிகிச்சை ஒத்திகை நடந்தது. ஓரகடம் அருகே பேருந்தும் லாரியும் மோதிக்கொண்டதில், 16 பேர் காயமடைந்ததாகக் கருதி அந்நிகழ்வு நடத்தப்பட்டது. அவர்கள் உடனடியாக, ஆம்புலன்ஸ்களிலும், கார்களிலும் கொண்டு வரப்பட்டனர். சம்பந்தப்பட்ட மருத்துவர்கள், செவிலியர்கள், பிற மருத்துவ பணியாளர்கள் அவசர சிகிச்சை பகுதியில் அவர்களுக்கு சிகிச்சை மேற்கொண்டனர். ஒருவர் வரும்போதே இறந்து விட்டதாக அறிவிக்கப்பட்டு, மூன்று பேர் பெரிய காயங்களுடன் தீவிர சிகிச்சை பிரிவில் சேர்க்கப்பட்டனர்.

சிறிய அளவில் காயமடைந்தவர்கள் சிகிச்சை அளிக்கப்பட்டு வீடு திரும்பினர். இப்படிப்பட்ட பேரிடர் ஒத்திகைகள் மருத்துவ மனையின் தயார் நிலையை உறுதி செய்வதற்காக மேற்கொள்ளப்பட்டது என்று அந்த செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.